Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 311
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 24 றஜப். 5 செவ்வாய்க்கிழமை [10-10-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# 'இன வேற்றுமை நம்நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கிறது'

## நிருபர்கள் மகாநாட்டில் பிரதமர் வெளியிட்ட மனக்குறை



கொழும்பு, திங்கள்

இலங்கையின் வளர்ச்சிக்கு இங்கு நிலவும் இன வேற்றுமைகள் தடையாக இருந்துவருகின்றனவென்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

மலேசியா குறுகிய காலத்தில் எவ்வாறு துரிதமாக அபிவிருத்தியடைய முடிந்தது என்று நிருபர்கள் கேட்டபோது, இனத்தகராறுகளும் வேறுபாடுகளும் இருக்கும்வரை நாடு எங்ஙனம் வளர்ச்சியடைய முடியும்? என்று பிரதமர் பதிலளித்தார்.

தென்கிழக்காசிய பொருளாதாரக் கூட்டில் சேருவது பற்றி இறுதிமுடிவு எதுவும் இன்னும் செய்யப்படவில்லையென்றும், இது விஷயமாக இந்திய அரசாங்கத்துடன் ஆலோசனை செய்துவருவதாகவும், திருமதி காந்தி இலங்கைக்கு விஜயம்செய்த பின்னர் பல்வேறு விஷயங்கள் குறித்தும் இந்தியாவு

(6-ம் பக்கம் பார்க்க)

## ராஜாங்க மந்திரி இன்று செல்கிறார்

கொழும்பு, திங்கள்

ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அல்ஜீரியாவில் நடைபெறும் மகாநாட்டில்கலந்துகொள்வதற்காக நாளை இங்கிருந்து புறப்படுவார்.

பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாகவம் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றத்தையும் உள்ளடக்கிய திட்டமொன்றை திரு. ஜெயவர்த்தன மாநாட்டில் சமர்ப்பிக்கவிருக்கிறார். திட்டத்திற்கு பல நாடுகள் ஆதரவளித்து ஏற்றுக்கொள்ளக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தில் இந்தியாவும் சேருமென எதிர்பார்க்கப்படுகிறது

## 'யாழ்நங்கை' சிலை பற்றி பிரதமருக்கு ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலைய முன்றலில் அமைக்கப்பட்டுவரும் ''யாழ் நங்கை'' சிலை பற்றி பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்தச் சிலை நிறுவுவது சம்பந்தமான புகார் ஒன்றை யாழ்ப்பாண பொதுமக்களில் சிலர் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

தடாகத்தில் சரஸ்வதி வீணைவாசித்துக் கொண்டிருப்பது போன்ற சிலை இங்கு முதலில் அமைக்கப்பட்டதென்றும், ஒரு சிலரின் தூண்டுதலின் பேரில் இச்சிலையின் நான்கு கரங்களில் இரு கரங்களும் வீணையும் அகற்றப்பட்டதோடு, இப்போது இரு கரங்களில் யாழ் வாசித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு பொருத்தமற்ற சிலை இங்கு நிறுவப்பட்டுவருவது கலையின் தரத்தைக் குறைப்பதாகபுகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன நூல்நிலையம் பொதுமக்களின் பணத்தினுலேயே கட்டப்பட்டுவருகின்றதென்றும், இதற்காக சுமார் மூன்றரை லட்சம் ரூபா பணத்தை யாழ் நூல்நிலைய சங்கத்தினரேமாநகர சபைக்கு வழங்கினரென்றும், இந்தவேளையில்தேவையற்ற ஒரு சிலரின் தலையீடு புறக்கணிக்கப் படவேண்டுமென்றும் இதில் விசேஷமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாம். [ந. நி.

## சூதாட்ட வழக்கு: 32 பேரும் விடுதலை

யாழ்ப்பாணம். செவ்வாய்

சட்டவிரோதமாகச் சூதாடியதாக 32 பேர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளை, யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் நேற்று விடுதலைசெய்தார்,

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 32 பேரும் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் திகதி யாழப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள வர்த்தக ஸ்தாபனத்தின் மேல்மாடியொன்றில் சட்டவிரோதமாகச் சூதாடியதாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. முதலாம் எதிரி சார்பில் புரக்டர் ஆர். விசுவநாதனும், மற்றைய எதிரிகள் சார்பில் புரக்டர்கள் தளையசிங்கம் யோகநாதன். வி. நடராசா, எஸ். சி. கதிரவேலு ஆகியோரும் ஆஜராகியிருந்தார்கள். [ந. நி.

## பலத்த போட்டி இருக்கும்

கொழும்பு, திங்கள்

செனட்சபை காலிஸ்தானங்களுக்கு பலத்தபோட்டி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

திருவாளர்கள் ஏ. பி. ஜெயசூரியாவும் ஐ. கருணகொடையும் மீண்டும் இப் பதவிக்கு தெரிவுசெய்யப்படலாமெனத்தெரியவருகிறது.

திருவாளர்கள் வீரவிமலரத்தின, எட்மன் சமரவிக்கிரமா, ரி. நீதிராசா ஆகியோரும் இப்பதவிக்குப் போட்டியிடுவதாகத் தெரிகிறது. தற்பொழுது பதவி வகிக்கும் பத்து செனட்டர்களின் பதவிக்காலம் இம்மாதம் 12ந் திகதியுடன் முடிவடைகின்றது.

செனட்டர்கள் தெரிவு பற்றி அரசாங்க பாராளுமன்றக்குழு இம்மாதம்21-ந் திகதி கூடும்பொழுது ஆராயும் எனத் தெரிகிறது.

## பெருமாள்கோவில்தேர்

யாழ்ப்பாணம், செவ்.

வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ் வரதராஜப் பெருமாள் கோவில் இரதோற்சவம் நாளை நடைபெறும். காலை 11 மணியளவில் சுவாமி தேர்

நவம்பர் மாத இறுதியில்

## மேற்கு ஜெர்மன் ஜனாதிபதி இலங்கைக்கு வருவார்

கொழும்பு, திங்கள்

மேற்கு ஜெர்மனி ஜனாதிபதி டாக்டர் கோர்ட் கெயிளிங்கர், நவம்பர் மாத இறுதியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

டாக்டர் கெயிளிங்கர், அடுத்த மாதம் 19-ந் திகதியன்று மேற்கு ஜெர்மனியிலிருந்து புறப்பட்டு, முதலில் இந்தியாவுக்குச் செல்வார். அவர் இலங்கைக்கு 24-ந் திகதி வந்து, 26-ந் திகதி பாகிஸ்தான் மூலம் தாயகம் நோக்கித் திரும்புவார்.

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பிறகு, இலங்கைக்கு ஜெர்மன் தலைவர் ஒருவர் விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும்.

வல்வெட்டித்துறையில்

## வெள்ளிப்பாளங்கள் சிக்கின: சந்தேகநபர் இருவர் கைது

யாழ்ப்பாணம், செவ்.

சுமார் 2000 ரூபா பெறுமதியான வெள்ளிப்பாளங்களையும், மருந்துப்போத்தல்களையும் வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வைத்து பொலிஸார் கண்டுபிடித்தனர். இங்கிருந்து இவைகள் இந்தியாவிற்குக் கள்ளமாகக் கடத்துவதற்காக எடுத்துச்செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. விஜயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரே இதனைக் கண்டுபிடித்தனர்.

இப்பொருட்கள்வல்வெட்டித்துறை சுங்க இலாகாவிற்கு அருகாமையில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டன.

இது சம்பந்தமாக திருநாவுக்கரசு, முத்துக்குமாரு ஆகிய இருவரையும் பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்தனர். விசாரணை தொடர்ந்துநடைபெறுகின்றது. [ந. நி.

## நவராத்திரிவிழா பொருட்கள் தட்டுப்பாடு

காங்கேசன்துறை, திங்.

நவராத்திரி விழாவுக்கு தேவையான சர்க்கரை, கற்கண்டு, கடலை முதலிய உணவுப் பொருட்கள் தட்டுப்பாட்டைநீக்க உதவிசெய்யுமாறு தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு அவசரக்கடிதமொன்றை முன்னாள் காங்கேசன்துறைப் பட்டின சபைத் தலைவர் அனுப்பி வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சமயம், மொழி, சாதி, தேசியம் முதலியவற்றின் பெயரால் இன்று உலகில் மக்களிடை ஏற்படும் வேற்றுமையும் குழப்பமும் கொஞ்சமன்று, சற்றேநாம் தினசரி சில நிமிட நேரமாவது தனித்திருந்து, உள்முகமாக தியானித்தால், உயிர்கள்பால் நமக்கு அன்பும் ஒருமைப்பாடும் ஏற்பட்டு தெளிவும் அமைதியும் பிறக்கும்.

—சுவாமிராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு புரட்டாதி 24உ 10-10-67

## சுதந்திரமளித்த அரசியல் ஞானி

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பர்மா முதலிய நாடுகளுக்கு அரசியல் சுதந்திரமளித்த முன்னுள் தொழிற்கட்சிப் பிரதமர் அட்லி பிரபு காலமானதைக் கேட்க இந்த நாட்டு மக்களெல்லாரும் அவருக்கு நன்றி கலந்த அஞ்சலியை மனப்பூர்வமாகச் செலுத்துவார்கள். தங்கள் உண்மையான நண்பனை இழந்துவிட்டதாக உணர்கின்றுர்கள்.

இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின் பிரிட்டனில் சர்வின்ஸன்ட்சர்ச்சிலின் கட்சி பொதுத் தேர்தலில்வெற்றிபெற்றிருந்தால் நமக்கெல்லாம் சுதந்திரம் கிடைத்திருக்குமா என்பது மிகவும் சந்தேகம். மகாராணியின் ஏகாதிபத்தியத்தைக் கலைப்பதற்காகத்தான் பிரதமராக வரவில்லை என்று மிகத் திமிருடன் கூறிய சர்ச்சில், நமக்குச் சிறிது சுதந்திரமும் அளித்திருப்பாரா?

பிரிட்டிஷ் மக்கள் அரசியல் ஞானமும் அனுபவமும் பெற்றவர்கள். ஆதலால் யுத்தத்தில் வெற்றியீட்டித்தந்த சர்ச்சிலையும் அவரது கட்சியையும் உதறித்தள்ளி, அட்லியைத் தலைவராகக் கொண்ட தொழிற்கட்சியிடம் அதிகாரத்தை ஒப்புவித்தனர். உலகப் போக்கை உணர்ந்த அட்லி அவர்கள் மிகவும் துணிச்சலுடனும் தீர்க்கதரிசனத்துடனும் நமக்கெல்லாம் அரசியல் சுதந்திரமளித்து, பிரிட்டனின் புகழை ஓங்கச்செய்ததுடன் காமன்வெல்த்தை விரிவான அடிப்படையில் அமைத்து நமக்கும் பிரிட்டனுக்கும் நல்லுறவைப் பலப்படுத்தினுர். உலகசரித்திரம் காணுத ஒரு புதுமை இது.

சில ஆண்டுகளுக்குமுன்பாக அட்லி பிரபு இலங்கை வந்திருக்கையில், ஒரு பத்திரிகை நிருபர், ஜனநாயகத்திலே சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளையும் நன்மையையும் எவ்விதம் பாதுகாப்பது என்று கேட்டதற்கு, அவர் இருமுக்கிய யோசனைகளைக் கூறினுர். ஒன்று சிறுபான்மை சமூகத்தவரிடையே கட்டுப்பாடும் ஒற்றுமையும் வேண்டும். மற்றது மிக மிகப் பொறுமையுடன் காரியங்கள் செய்து பெரும்பான்மைச் சமூகத்தினரின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற வேண்டும்.

அச்சமயம் இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு, வகுப்புக் கலவரங்களில் தமிழர் பெரிதும் சங்கடப்பட்டு, இனி தங்கள் அரசியல் எதிர்காலம் என்னவோ என்று திகைத்து இந்த 'ஜனநாயக' முறையில் நம்பிக்கை இழந்திருந்தனர். அந்த நிலை இப்போது சற்றே மாறியிருப்பினும், தங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்ற திட நம்பிக்கை அவர்களுக்கு இன்னும் ஏற்படவில்லை. ஜனநாயகமென்பது 51 பேர் சேர்ந்து 49 பேர் மீது நிரந்தரமாக அரசியல் ஆதிக்கம் செலுத்துவதுதானு என்ற அச்சமும் நீங்கவில்லை.

சுதந்திரம் கிடைத்த புதிதில் சிற்சில தவறுகள் நடப்பது இயற்கையே. அனுபவம் ஏற ஏற, சிறுபான்மை சமூகத்தினரின் ஒத்துழைப்பும் நாட்டில் ஒற்றுமையும் அமைதியும் நிலவினுல்தான்முன்னேற முடியுமென்ற உணர்வு ஏற்படின் பெரும்பான்மைச் சமூகத்தவர் கூல்லாத தவறுகளைச் செய்ய மாட்டார்கள். சிறுபான்மையினரைத்திட்டி அவர்களது உரிமைகளைப் பறிப்பதுதான் தேசாபிமானமென்று நினைக்க மாட்டார்கள். துரதிருஷ்ட வசமாக அவ்வித நிலைமை இன்னும் இங்கு ஏற்படவில்லை.

இந்நிலையில் சிறுபான்மைச் சமூகத்தவர் என்ன செய்வது? ஜனநாயக சுதந்திரம் வேண்டாமென்பதா அல்லது பிரிந்து செல்ல முற்படுவதா? துரதிருஷ்டவசமாக சிறுபான்மைச் சமூகத்தவரிடையே இச்சோதனை காலத்திலும் அட்லிபிரபு வற்புறுத்திய ஒற்றுமையும் ஒத்துழைப்புமில்லை. இந்நிலையில் அவர்கள் மதிப்பும் சக்தியும் உயர்ந்து எவ்விதம் தங்கள் உரிமையைப் பெற முடியும்?

அட்லிபிரபு கூறியஅந்த இரு முக்கிய யோசனைகளையும் சிறுபான்மை சமூகத்தலைவர்கள் சிந்தனை செய்து, தங்களிடையே விட்டுக்கொடுத்து ஒற்றுமைப்பட்டு மிகப் பொறுமையுடனும் தீர்க்கதரிசனத்துடனும் காரியங்கள் செய்யவேண்டும். அதில்தான் சிறுபான்மைச் சமூகத்தின் நன்மை மட்டுமன்றி ஜனநாயக வெற்றியும் நாட்டின் எதிர்கால நன்மையும் தங்கி இருக்கும்.

## தேர்த் திருப்பணிச் சபை

சுழிபுரம், திங்கள்

பொன்னுலை வரதராசப் பெருமாள் கோவிலுக்கு ஒரு புதிய தேர் செய்வதற்காகச் சபையொன்று நிறுவப்பட்டுள்ளது.

போஷகர்கள்: பிரம்மஸ்ரீ இ. குமாரசாமிக்குருக்கள், திரு. இ. சிவப்பிரகாசம், தலைவர்: திரு. செ. கந்தையா உபதலைவர்: திரு. அ. தையல்பாகர், திரு. எஸ். இராசரத்தினம், பொதுக்காரியதரிசி: திரு. மு. சிவப்பிரகாசம், துணைக்காரியதரிசி: திரு. க. மகாதேவன், தனுதிகாரிகள்: திருவாளர்கள் எஸ். எஸ். பொன்னுத்துரை. பொ. தியாகராசா, மு. தாமோதரம்பிள்ளை. திருவாளர்கள் அ. கோவிந்தபிள்ளை, மு. செல்லையா, எஸ். ஞானப்பிரகாசம், தி. ச. வரதராசன், மா. கிருஷ்ணர், க. நல்லதம்பி ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஆனந்தக்கும்மி அடியுங்கடி!

—சு. மகாலிங்கசிவம்—

பங்கயச் செல்வியைப் பாடுங்கடி! அவள்
பண்பினை யின்புறப் போற்றுங்கடி!
எங்கள் கலைச்செல்வி யன்னவளைப் போற்றி
ஆனந்தக் கும்மி அடியுங்கடி!
[பங்கயச் . . .]

நன்மணம்வீசுபொன் மேனியதில் அவள்
வெண்ணிற ஆடை அணிந்திடுவாள்!
இன்பமிலங்கு மெழில்வத னந்திகழ்
ஏரியிற் பூத்தசெந் தாமரையோ!
[பங்கயச் . . .]

வெண்ணிறத்தாமரை மீதமர்ந்து அவள்
பண்ணுடன் வீணை பயின்றிடுவாள்!
பண்ணுறப்பாடிடும் பாவலர்க்கு அவள்
பாங்குடன் நாவி லமர்ந்திடுவாள்!
[பங்கயச் . . .]

எண்ணெட்டுக்கலைக ளத்தனையு மவள்
அன்புட னீன்ற குழவியடி!
எண் ணித்துதிக்கு மிரவலர்க்கு மவள்
இனிதே யவைதனை யீந்திடுவாள்!
[பங்கயச் . . .]

பாடுங்கடியெங்கள் பங்கயச் செல்வியின்
பண்புக ளின்புறப் பாடுங்கடி!
ஆடுங்கடியெங்கள் அன்புசே ரன்னையின்
ஆனந்தக் கும்மி அடியுங்கடி!

## 'தமிழ்நூல்களை மீண்டும் பரிசீலனை செய்க'

கொழும்பு, திங்கள்

''ஈழத்தமிழ் நூல்களின் பிரசுரத்தையும் விற்பனையையும் ஊக்குவிக்குமுகமாக, இந்தியாவில் பிரசுரிக்கப்பட்ட நூல்கள் இவ்வாண்டில் சாகித்தியமண்டலம் தன்பரிசுத் திட்டத்திலிருந்து நிராகரித்தமையைப் பாராட்டுகின்ருேம். ஜனநாயக எழுத்தாளர் சென்ற சில ஆண்டுகளாக நடத்தி வந்த கிளர்ச்சிக்கு இது வெற்றியாக அமைந்துள்ளது'' என்று கொழும்பு இலக்கியவட்டம சாகித்திய மண்டலத்திற்கும், கல்வி கலாசார அமைச்சிற்கும் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

நூல்கள் பற்றிய நடுவர்களின் ஒருமுகமான தீர்ப்பு முற்ருகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட ஒரு துறை நூல்களுக்கு மட்டுமே பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்குக் குறிப்பிட்ட ஒரு அங்கத்தவரே காரணமெனவும் அறியப்படுவதாகவும், இதனுல் மற்றைய தமிழ் உறுப்பினர்கள் மீது தமிழ் மக்கள் மத்தியில் தப்பபிப்பிராயம் ஏற்பட வழியேற்படுவதாகவும் எனவே அந்தக் குறிப்பிட்ட உறுப்பினர், சபையிலிருந்து ராஜிஞமாச் செய்ய வற்புறுத்தப்பட வேண்டுமென்றும், சென்ற ஆண்டில் வெளியான 50க்கும் மேலான நூல்கள் மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டுமென்றும், 1966-ம் ஆண்டுக்கான தமிழ் துறைப் பரிசுகள் பற்றி எழுதப்பட்ட பிரஸ்தாப கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் முறையில் செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டவும் கொழும்பு இலக்கியவட்டம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

### இன்றைய பலன்

10-10-67
செவ்வாய்க்கிழமை
(புரட்டாதிமாதம் 24உ)

நட்சத்திரம்- மூலம் காலை 6-19மேல்பூராடம்.

திதி- ஸப்தமி. பகல் 11-57 மேல் அட்டமி.

சுபநேரம்- 10-32-12-02

ராகுகாலம்- 3-02 - 4-32.

மேஷம்: கற்றவர்உறவு, கவலை நீங்கும்.

ரிஷபம்: தலைக்கனம் வேண்டாம் தள்ளிவிடும் கீழே.

மிதுனம்: மாதரால் மகிழ்ச்சி, இன்புற்றுவாழ்தல்.

கடகம்: அவப்பெயர் கேட்டல், அடக்கமே நன்று.

சிம்மம்: புண்ணிய விருப்பு, தியாகசிந்தை.

கன்னி: தாமத சித்தி, தரும சிந்தை.

துலாம்: நன்றே செய்வீர், நலமும் சேரும்.

விருச்சிகம்: இராசகவலை இருண்ட மனம்.

தனுசு: பந்துக்கள் தொல்லை, பரபரப்பு.

மகரம்: எண்ணம்போல் வாழ்வு, ஏற்றமுமுண்டு.

கும்பம்: தெய்வசிந்தை, யாத்திரைப்பிரியம்.

மீனம்: சொந்தமும் பந்தமும் கூடிவரும்.

—சோதிடக் கலாநிதி—
திருமலைக வேலுப்பிள்ளை

## நாட்டிலும் நகரிலும்

நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் ஒரு விஷயம் தீய காரியங்களில் முடிவுறுவதற்கு நமது பல்கலைக் கழகத்தில் நிகழும் 'ருக்கிங்' என்ற கிண்டல் வைபவங்கள் அத்தாட்சி.

பல்கலைக் கழகங்களுக்கு முதன் முதலாக அடி எடுத்து வைக்கும் புதுமுகங்கள் அங்குள்ள பெரிய கட்டடங்களையும் பேராசிரியர், விரிவுரையாளர்களையும் கண்டு பிரமித்து கூச்சப்படுவது இயற்கையே. சரஸ்வதி பூஜைக்கு ஏடு துவக்கும் நான்கு வயது பையனுக்கும் பள்ளிக்கூடப் பிரவேசம் பிரமிப்பையும் கூச்சத்தையும் உண்டு பண்ணும்.

இந்தக் கூச்சத்தையும் பிரமிப்பையும் நீக்குவதற்காக இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் முதலிய சர்வ கலாசாலைகளில் இந்த 'ருக்கிங்' வேலை ஆரம்பித்தது. அதைத்தான் இங்கே இலங்கையிலும் 'கொப்பி' அடிக்கிருர்கள்.

ஆனுல், அங்கே இந்த கிண்டல் வியாபாரம் சுத்தமாக நடந்தது. இங்கே அது தீய வழிகளில் போய்விட்டது.

பேராதனையில் போன ஞாயிற்றுக்கிழமை ஒரு புதுமுகப்பெண்ணை ஏழெட்டு இளம் மாணவர்கள் சூழ்ந்து கொண்டு பலவகையாகத் துன்புறுத்தி தகாத முறையிலும் நடக்க முற்பட்டார்களாம். நல்ல வேளையாக பல்கலைக் கழக காவலர் ஒருவர் தக்க சமயத்தில் ஸ்தலத்துக்கு வந்து அந்த பெண்மணியின் மானத்தைக் காப்பாற்றினுராம்.

வைத்திய கலைப் பிரிவில் புதிதாகச் சேர்ந்த சிலமாணவர்களை பழைய மாணவர்கள் வைத்திய சோதனைக்கு வந்த செத்தமானிடப்பிணங்களின் நிணத்தை மணக்கும்படி வற்புறுத்தினுர்களாம். நல்லவேளையாக அவர்கள் அந்தப் புலாலை உண்ணும்படி நிர்ப்பந்தப் படுத்தவில்லை.

ஆண்கள் மட்டும் இந்த கிண்டல் வேலைகளில் ஈடுபடுவதில்லை. பெண் மாணவிகளும் தங்கள் பகுதிக்கு வரும் புதியவர்களை 'சிகரெட் குடி, அரை நிர்வாணமாக ஆடு' என்றெல்லாம் தொந்தரவு செய்கிருர்களாம்.

புதிய மாணவ மாணவிகள் இவற்றையெல்லாம் ஒரு முகப்பாத்தியாக நினைத்து சந்தோஷமாகவிளையாடினுர்களானுல் பரவாயில்லை. ஆனுல் கிராமங்களிலிருந்து வரும் சிலபுதியவர்கள் இந்த வன்செயல்களைக் கண்டு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு மூர்ச்சை போட்டு விடுவார்கள். பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பு படிக்க வந்தவர்களுக்கு இப்படிப்பட்ட காட்டுமிராண்டி வரவேற்பு எப்படியிருக்கும்?.

'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்று பேசாமல் வீடுதிரும்பினுலும் திரும்பிவிடுவார்கள்,

அசிங்கமான கிண்டல்களைத் தவிர்த்து 'ஒற்றைக் காலில் நில், தோப்புக் கரணம்போடு, தலைகீழாய்நில்' என்று ஏதாவது கண்ணியமான கட்டளை இட்டால் என்ன?

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தினர் ஜக்கார்த்தா திரும்ப சீன மறுப்பு

## இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் ஆதாம் மாலிக் அறிவிப்பு

ஜக்கார்த்தா, ஒக். 9

**பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தினரை ஜக்கார்த்தா திரும்புவதற்கு அனுமதி அளிக்கச் சீன மறுத்துள்ளதாக, இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் ஆதாம்மாலிக் தெரிவித்துள்ளார்.**

இந்தோனேஷிய தூதரக ஊழியர் ஜக்கார்த்தாவுக்குப் பத்திரமாகத் திரும்பி வரும் வரை, ஜக்கார்த்தாவிலுள்ள சீனத் தூதரகத்தினர் பீகிங் செல்ல அனுமதிக்க மாட்டார் என்வும் அவர் கூறியுள்ளார்,

**ஆழ்ந்தகவலை**

பீகிங்கிலுள்ள இந்தோனேஷிய தூதரகத்தினரின் பத்திரமான நிலைபற்றித் தாம் ஆழ்ந்த கவலைகொண்டிருப்பதாகவும் டாக்டர் ஆதாம் மாலிக் கூறினர்.

**சுஹார்ட்டோ உத்தரவு**

இதற்கிடையில், இலங்கையிலும், தென்வியட்னமிலுமுள்ள இந்தோனேஷிய தூதுவர்களை ஜக்கார்த்தா திரும்புமாறு இந்தோனேஷிய ஜனதிபதி ஜெனரல் சுஹார்டோ உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இவ்விரு தூதுவரும், 1965-ல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் இராணுவச் சதியில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சாட்சியம் கிடைத்திருப்பதாலேயே ஜெனரல் சுஹார்டோ இவ்விதம் உத்தரவிட்டிருப்பதாகவும், ஆனல், இவ்விரு தூதுவரும் ஜக்கார்த்தா திரும்ப மறுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியர் காலமானர்

லண்டன், ஒக். 9

பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியரான சேர் நோர்மன் ஏஞ்சல், நேற்றுக் காலமானர். அவருக்கு வயது 94.

சேர் நோர்மன் ஏஞ்சல, நோபல் சமாதானப் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தி மொழி பற்றி ராஷ்டிரபதி கருத்து

புதுடில்லி, ஒக். 9

இந்தியை இந்தியாவின் தேசிய மொழியாக்குவதன் மூலம் பிராந்திய மொழிகள் அகற்றப்படும் அல்லது அவற்றின் வளர்ச்சி குன்றிவிடும் என்ற கருத்தைத் தாம் ஒப்புக் கொள்ளவில்லையென்றுஇந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின். இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

## நாட்டை விட்டேகுமாறு அமெரிக்க தூதுவருக்கு உத்தரவு

### தென் அமெரிக்க குடியரசு ஈகுவடோர் நடவடிக்கை

குவிற்றே, ஒக். 9

**தென் அமெரிக்கக் குடியரசான ஈகுவடோரிலிருந்து, அங்குள்ளஅமெரிக்கத் தூதுவர் 48 மணி நேரத்தில் வெளியேற வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.**

ஈகுவடோர் ஜனதிபதி இந்தாபுருவை விமர்சகம் செய்யும் வகையில் ஒரு கூட்டத்தில் அமெரிக்கத் தூதுவர் பேசியதே, இந்த நடவடிக்கைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

**இராஜாங்க இலாகா**

இந்த உத்தரவை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளதாக வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்துள்ளது. ஆனல் அமெரிக்கத் தூதுவரின் பேச்சு, ஈகுவடோர் ஜனதிபதிக்கு எவ்வித அகௌரவமும் காட்டும் வகையில் ஆற்றப்படவில்லை என அது தெரிவித்தது.

## மறைந்த அட்லி பிரபுவுக்கு பிரதமர் வில்சன் புகழ்மாலை

லண்டன், ஒக். 9

காலஞ்சென்ற முன்னள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி பிரபுவுக்கு உலகத்தின் பல பாகங்களிலுமிருந்து அனுதாபச் செய்திகள் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன.

அட்லி பிரபு பற்றிப் பேசுகையில், 'பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பொது நல நாடுகள் சங்கமாக மாற்றுவதற்குக் காரணமாக விருந்தவர் அவர்' என்று பிரதமர் வில்சன் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் வில்சன் மேலும் கூறியதாவது:

'போரினல் பாதிக்கப்பட்டிருந்த பிரிட்டனுக்கு அட்லி பிரபு பிரதமரானர். அவர் பிரிட்டனை ஒரு சேம நல நாடாக்கி, உலகத்துக்கே உதாரணமாக அதை விளங்கச் செய்தார்.'

## அல்ஜியர்ஸ் 77 மாநாட்டுக்கு இந்தியவர்த்தக தூதுகோஷ்டி

புதுடில்லி, ஒக் 9

இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ் சிங்கின் தலைமையில், ஒரு வர்த்தகதூது கோஷ்டி இன்று அல்ஜியர்சுக்குப் புறப்பட்டுள்ளது.

அல்ஜியர்ஸில் நடைபெறும் 77 மாநாட்டுக் கூட்டத்தில் பங்குபற்றவே இத்தூது கோஷ்டி செல்கிறது.

ஜெனீவாவில் 1964 ல் பொருளாதார ஒத்துழைப்பை நோக்கமாகக் கொண்டு 77 நாடுகள் ஒரு மாநாட்டில் சந்தித்தன. அதையொட்டியே நாளை நடைபெறும். அல்ஜியர்ஸ் மாநாட்டுக்கு 77 மாநாடு என்ற பெயர் கிடைத்தது.

**86 நாடுகள்**

ஆனல் இம்முறை மொத்தம் 86 நாடுகள் இப்பொருளாதார மாநாட்டில்பங்குபற்றுகின்றன.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் புதுடில்லியில் கூடவிருக்கும் ஐ.நா. பொருளாதார மாநாட்டுக்கு முன்னேடியாகவே இந்த அல்ஜியர்ஸ் பொருளாதார மாநாடு நடக்கிறது.

## ஜப்பானிய பிரதமர் ஜக்கார்த்தா வந்தார்

ஜக்கார்த்தா, ஒக். 9

ஆசிய நாடுகளுக்கான தமது விஜயத்தை மேற்கொண்டு, ஜப்பானியப் பிரதமர் திரு. சாட்டோ, இந்தோனேஷியத் தலைநகரான ஜக்கார்த்தாவுக்கு நேற்று வந்து சேர்ந்தார்,

அவர் விமான நிலையத்தில் பேசுகையில், இந்தோனேஷியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே வளர்ந்துவரும் உறவுகள் பற்றிக் குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியா, நியுசிலாந்து, பிலிப்பைன்ஸ் தென் வியட்னும் ஆகிய நாடுகளுக்கும் அவர் செல்லவிருக்கிருர்.

## நினைவு தினக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கைப் புகையிரதப் பகுதிப் பிரதம சிறுப்பராயிருந்து காலஞ்சென்ற சிவ. கனகசபாபதியின் நினைவு தினக் கூட்டம் இன்று மாலை கோண்டாவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெறும். கூட்டத்திற்கு திரு. சி. இரத்தினசிங்கம் தலைமை வகிப்பார்.

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், உடுப்பிட்டி எம். பி. திரு. எம் சிவசிதம்பரம். தீவுப் பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் ஆகியோர் இக் கூட்டத்தில் உரைநிகழ்த்துவர். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோவில் முன்றிலிலிருந்து அவரின் படம் ஊர்வலமாகப் பாடசாலைக்குஎடுதுச்செல்லப்படும்.

## 'விண்வெளி ஆராய்ச்சியை கல்விக்குப் பயன்படுத்துக'

### ஜோன்சன் வேண்டுகோள்

பேர்ஜீனியா, ஒக். 9

இங்கு நடைபெற்ற சர்வதேச கல்வி மாநாடொன்றில் பேசுகையில், விண்வெளி ஆராய்ச்சி தொடர்புகள் ஆகியவை கல்விக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் கேட்டுக்கொண்டார்.

டெலிவிஷன், விண்வெளித் தொடர்புகள், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றைக் கல்வியின் பயனுக்காக உலகம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ருர் அவர்.

இம்மாநாட்டில், 53 நாடுகளில் சேர்ந்து 200க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர்.

## உத்தியோக உயர்வுடன் இடமாற்றம்

புத்தளம், திங்கள்

நீர்கொழும்பு மாவட்ட தொழில் திணைக்களத்தில் கடமையாற்றிய க. பரமநாதன் புத்தள மாவட்ட தொழில் திணைக்களத்தின் பொறுப்பதிகாரியாக இம் மாதத்திலிருந்து பதவியேற்றுள்ளார்.

## இந்தியப்பிரதமர் இந்திராவுக்கு போலாந்தில் பெரும்வரவேற்பு

### ரஷ்ய பிரதமர் கொஸிஜினுடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகள்

வார்சோ, ஒக். 9

போலாந்துக்கு வந்துள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இன்று போலாந்துப் பிரதமர் திரு. செரன்காவிச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

போலாந்துவரும் வழியில், மாஸ்கோவில் சில மணி நேரம் தங்கியிருக்கையில், பிரதமர் இந்திரா, ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினுடன் பல பிரச்னைகளை விவாதித்தார்.

ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினுடன் தாம் நடத்திய பேச்சுவர்த்தைகள் 'சிநேகமான, பயனுள்ள' பேச்சுவார்த்தைகளாக அமைந்ததாகப் பிரதமர் இந்திரா காந்தி பின்னர் குறிப்பிட்டார்.

மேற்கு ஆசியா பற்றி, இரு பிரதமர்களிடையேயும் கருத்தொற்றுமை நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

**சகல துறைகளிலும் உதவி**

இந்தியாவுக்குச் சகல துறைகளிலும் உதவியளிப்பதில் ரஷ்யாவுக்கு உள்ள அக்கறையை ரஷ்யப் பிரதமர் திரு கொஸிஜின் இப்பேசுவார்த்தைகளின் போது வெளியிட்டதாகக் கூறப்பட்டது.

**அயூப் விஜயம்**

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானின் விஜயம் பற்றியும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

**போலாந்தில் வரவேற்பு**

போலாந்தில், வார்சோ விமானநிலையத்தில் இந்தியப் பிரதமர் வந்திறங்கும்போது கடும் மழை பெய்துகொண்டிருந்தது. ஆனலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் [illegible] விமான நிலையத்தில் திரண்டிருந்தனர்.

## ஜோர்தான் இராணுவத்தலைமையை மன்னர் ஹுசெயின் ஏற்ருர்

அம்மான், ஒக். 9

ஜோர்தான் மன்னர் ஹுசெயின், தனது நாட்டின் இராணுவப் படைகளின் மேற்பார்வையைத் தாமே மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மேற்கு ஆசியப் போரில், அரபு நாடுகளுக்கும் ஏற்பட்ட இராணுவத்தோல்வி 'வெட்கக் கேடானது' என்றும், குறுகிய காலத்துக்குள் அந்த அவமானம் எப்படியாயினும் அழிக்கப்பட வேண்டுமென்றும் மன்னர் ஹுசெயின் கூறியுள்ளார்.

ஜோர்தான் இராணுவத்தைச் சேர்ந்த 4 சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். கடந்தபோரில், மேற்கு முனையில் தளபதியாகக் கடமையாற்றியவரும் இவர்களில் ஒருவராவார்.

## வண்டாடும் பாண்

புன்னாலைக்கட்டுவன், திங்.

இப்பகுதியில் விநியோகிக்கப்படும் பாணில் வண்டுகள் நிறைந்திருப்பதாயும், இதை உண்பதால் பல நோய்கள் ஏற்படக்கூடுமென்றும் ஓர் அபிப்பிராயம் நிலவுகிறது. பல பாடசாலை மாணவர் தமக்களிக்கப்படும் பாணை வேண்டாமெனக் கூறுவதாகவும் தெரிகிறது.

## தரம் உயரும்

காங்கேசன்துறை, திங்கள்

வசாவிளான் உபதபாற்கந்தோர் தபாற்கந்தோராக தரம் உயர்த்தப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஹரிஜன குடியேற்ற திட்டம் அடுத்தவருடம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணத்திலுள்ள நாவாந்துறை, சோனகத் தெரு, திட்டி ஆகிய இடங்களில் வாடகைக் காணிகளிலிருந்து வரும் ஹரிஜனங்களுக்கு அடுத்த வருடத்திலிருந்து சொந்தக் காணி கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் குடியிருக்க சொந்தநிலமில்லாது இருக்கும் இவர்களுக்கென காணி நீர்ப்பாசன அமைச்சரினுல் வகுக்கப்பட்ட புதிய குடியேற்றத் திட்டத்தின் அடிப்படையிலேயே இந் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாகத் திரட்டப்பட்ட புள்ளி விபரங்களிலிருந்து யாழ்ப்பாணத் தொகுதியில் மாத்திரம் 450 தாழ்த்ததப்பட்ட குடும்பங்கள் சொந்தக் காணியில்லாது உயர் சாதியினரின் காணிகளில் குடியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இதுவரை யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளைக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து உடுப்பிட்டியில் 60 குடும்பங்களும், உடுவிலில் 35 குடும்பங்களும், நல்லூரில் 40 குடும்பங்களும் இந் நிலையிலிருந்து வருவதாகத் தெரிய வந்துள்ளது. இன்னும் தனிப்பட்ட முறையிலும் சுமார் 200 குடும்பங்கள் தமக்குக் காணி வழங்குமாறு தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துள்ளனர்.

சகல விண்ணப்பங்களும் அவ்வப் பகுதி காரியாதிகாரிகளிடம் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாகத் தமிழரசுத் தலைவர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் உட்பட பல தமிழ் எம்.பி.க்கள் அண்மையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர்கள். இக்குடியேற்றத் திட்டம் அதிகமாக அடுத்த வருடம் ஏப்ரல்மாதத்துக்கு முன்னர் நடைபெறலாமெனத் தெரிகின்றது. [ந.நி.]



## லண்டன் சென்றுர்

யாழ்ப்பாணம், செவ். தலையாளி கொக்குவிலைச் சேர்ந்த திரு. எஸ். திருவருட்செல்வன் உயர் கல்விப் படிப்புக்காக லண்டன் சென்றுள்ளார். தொழில் நுட்பத்துறையில், இவர் லண்டன் இம்பீரியல் கல்லூரியில் தனது படிப்பை மேற்கொள்வார்.

பேராதனைப் பல்கலைக் கழகப் பொறியியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளின் பழைய மாணவர். இவர் எஸ். பி. சின்னத்தம்பி தம்பதிகளின் புதல்வராவார்.

# தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமான மகாநாடு

யாழ்ப்பாணம், செவ். சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்னைகளை சீக்கிரமாகவும், சுமுகமாகவும் தீர்ப்பதுபற்றி யாழ்ப்பாண மக்களின் ஆலோசனையை பெறும்பொருட்டு தீண்டாமை ஒழிப்புசம்பந்தமான மகாநாடுயாழ்ப்பாணம்மாநகரசபை மண்டபத்தில் நாளை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டில் திருவாளர்கள் ரி. பி. சுபசிங்கா, லெஸ்லி குணவர்த்தன, பீட்டர் கெனமன் ஆகியோர் கலந்து சொள்வார்கள். வடபகுதி சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி கிளை உறுப்பினர்களும் பங்குபற்றுவார்கள்.

சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர்களும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் என அறியப்படுகிறது.


எதிர்க்கட்சித் தலைவர்கள் மூவரும்இன்றுகாலை9மணிக்கு கொடிகாமத்திற்கு விஜயம் செய்து கலவரம் நடந்தபகுதிகளைப் பார்வையிடுவார்கள். அதன்பின் காலை10-30 மணிக்கு கரணவாய்ப்பகுதிக்கும், 11.30மணிக்குஅச்சுவேலிக்கும், மாலை 3மணிக்கு சங்கானைக்கும் விஜயம் செய்வார்கள்.

பொலிஸ் அதிபர்திரு. ஆர். சுந்தரலிங்கத்தையும் இவர்கள் சந்திக்கவிருக்கின்றனர்.

## ஊழியருக்கு எம்.பி. யோசனை

குரும்பசிட்டி, திங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி வசதி உதவிகளுக்கு கட்டுப்பட்டதாகவும் அதிகாரங்களுக்கு பட்டதாகவும் ஊழியர்களின் கோரிக்கைகள் இருக்க வேண்டும்.'' இவ்வாறு உடுவில் எம்.பி. திரு.வி. தர்மலிங்கம் இலங்கை உள்ளூராட்சி சேவையில் பதியப்படாத தமிழ் ஊழியர்களின் சமாசத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார். மல்லாகம் கிராம சபை அலுவலகத்தில் இவ்வாரம்பக் கூடடம்திரு. சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. செனட்டர் திரு. சு. நடராசாவும் சமுகமளித்திருந்தார். இவ்விழாவில் பரிசிலனை செய்து முடிவு எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் சம்பந்தமாக உள்ளூராட்சி அமைச்சரைப் பேட்டி காண்பது எனத் தீர்மானம் எடுத்ததனர்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்கள்:- திரு. வி. தர்மலிங்கம், திரு. எஸ். நடராசா. தலைவர்:- திரு. சி. ஆறுமுகம், உபதலைவர்;- திரு. க. சிவராசசிங்கம், காரியதரிசி;- திரு. த. சிறிகாந்தன், உபகாரியதரிசி:- திரு. ரி. தெட்சணமூர்த்தி. தனதிகாரி:- திரு. எஸ். வாமதேவன்.




# இளம் சமுதாயம் சீர்பெற வழி

அச்சுவேலி, திங்கள் ''நமது எதிர்காலச் சமுதாயம் முற்போக்குடையதோர் நல்ல சமுதாயமாக மாறவேண்டுமேயானுல் சிறுபராயம் தொட்டுச் சிறுவர்களிடையே நற்பண்பு, நற்சகவாசம், கல்வி முதலானவற்றைப் புகட்ட ஆசிரியர்களும், பெற்ருேரும், அறிவாற்றல் மிக்கோரும் முன்வரவேண்டும்.'

இவ்வாறு அச்சுவேலிபேர்ண்காம் பாடசாலையில் நடைபெற்ற சர்வதேச சிறுவர்தின விழாவிற்குத் தலைமைவகித்து உரைநிகழ்த்துகையில் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கா குறிப்பிட்டார்.

மல்லாகம் நீதிமன்றப் பிரிவுப் பாதுகாவற் கந்தோரினதும் அச்சுவேலி பேர்ண்காம் பாடசாலையினதும் ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

பெரியோர்களினதும், ஆசிரியர்களினதும் நல்லுபதேசத்தாலும், நல்லதோர் சூழ் நிலையாலும் சிறுவர்கள் நல்ல பண்பு, நல்லெண்ணம் முதலியனவற்ருல் சூழப்படுகிருர்கள். இதனுல், சிறுவர்கள் சமுதாயத்தில் நன்கு மதிக்கப் படுவதோடல்லாது தாங்களே ஒரு நற்சமுதாயத்தை ஆக்கிவிடுகின்ருர்கள். இதனுல் நாட்டிலே பஞ்சமாபாதகங்கள் நாளடைவில் தன்செயலற்று விடுகின்றன.

மனிதன் பிறக்கும்போது அவனுடன் ஒன்றும் கூட வருவதில்லை. இதேபோல் தான் இறக்கும்போதும். ஆகவே எதிர்காலத் தலைவர்களாகவர எத்தனித்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் தம் சக்திகள் முழுவதையும் நல்வழியில் செலுத்த வேண்டும்.

வடமானில வித்தியாதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பேசும்போது கூறியதாவது-

சிறுவர் குடும்பத்தில் ஓர் கண்ணியம் மிக்க அங்கம் எனப் பெற்ருேரும், பாதுகாவலரும் தம்மனதில் எண்ணவேண்டும். நல்லசூழ்நிலையைகுழந்தைகள் நாடச் செய்யவேண்டும். குழந்தை குற்றம் புரியுமேயானுல் அக்குழந்தையின் குற்றத்திற்குரிய காரணம் என்ன? என்பதை அறிந்து திருத்த முயலவேண்டும். இன்றேல் அரச பாதுகாப்பு அதிகாரிகளின் பொறுப்பில் விட வேண்டும்.

திருமதி வேதவல்லி கந்தையா பேசுகையில், சிறுவருக்கு சிறுபராயம் தொடக்கம் பெற்ருேரும் அயலாரும் நல்ல புத்திமதிகளைப் புகட்ட முன்வர வேண்டும். இவ்வுபதேசத்தினுல் சிறுவர்கவ் நற் பிரஜைகளாக மாறி சமுகத் தொண்டனையும் மாறி விடுகின்ருர்கள் என்ருர்.

மாணவர்களுக்கு பரிசில்களை திருமதி நவரத்தினம் வழங்கினுர்.

பேச்சுப் போட்டி:-

1ம்இடம் செல்வி இரத்தினகுமாரி கிறிஸ்ரோவர் [அச்சுவேலி புனிததெரேசா பாடசாலை] 2ம் இடம்:- செல்வன் எஸ். சுந்தரமூர்த்தி [பேர்ண்ஹாம் பாடசாலை அச்சுவேலி]

கட்டுரைப்போட்டி:-

1ம் இடம் செல்வி இரஞ்சினி [புனித தெரேசா பாடசாலை அச்சுவேலி] 2ம் இடம்:- செல்வி இரங்தினகுமாரி கிறிஸ்ரோவர் [புனித தெரேசா பாடசாலை அச்சுவேலி]

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள் கொழும்புத்துறை மத்திய சனசமூகநிலைய புதிய உத்தியோகத்தர்கள் தெரிவில் பின்வருவோர் நடப்பு ஆண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்; திரு. பி. அருளானந்தம், உதவித்தலைவர்: திரு. சி. இராசையா, இணைச் செயலாளர்கள்: திரு. க. கந்தசாமி, திரு. இ. செ. கந்தசாமி, பொருளாளர்: திரு ஞா. கில்பேட் உதவிப் பொருளாளர்கள்: திரு. விஜயகுமார், திரு நா. கா. சிறீஸ்கந்தராசா, போஷகர்கள்:- திருவாளர்கள்:- இ. மோசேஸ், கி. அந்தோனிப்பிள்ளை' திரு. தை. யேசுதாசன். 15 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## 2 வர்த்தகர்மீதுவழக்கு

இமையாணன், திங்கள் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. டி. டபிள்யு. எம். ஜெயசேகரா தலைமையில் சென்ற ஒரு கோஷ்டி, வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் உதவியுடன் உடுப்பிட்டியில் உள்ள ஒரு கடையில் திடீர்ச் சோதனையிட்டபொழுது, அக்கடையின் சொந்தக்காரர் பம்பாய் வெங்காயத்தை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதலான விலக்கு [இருத்தல் 30 சதத்திற்கு] விற்றதாகவும், விற்கப்பட்ட ஒருருத்தல் பாணின் நிறை குறைவாக இருந்ததாகவும் கைது செய்யப்பட்டார். தொண்டமானுற்றிலும் ஒரு வியாபாரி விற்ற ஒரு பாணின் நிறை குறைவாக இருந்ததாகக் கைதுசெய்யப்பட்டார். பின்னர் இவர்களிருவரும் பொலிஸ் நிலை [illegible] இவர்களிருவர்மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

"சூரியன் மார்க்"

வாசனை சந்தன வில்லைகள்

வாசனை சந்தனப் பவுடர்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எச்சரிக்கை

ஒரு சில போலி நபர்கள் ஹேலீஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்படும் விவசாய இரசாயனப் பொருட்களுக்கு ஓடர் சேகரிப்பதற்கும், விற்பதற்கும் தங்களை நேரடியாக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் என்பதாகக் கூறி போலி ரசாயனங்களை விற்று பொது மக்களை ஏமாற்றி வருவதாக எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பொலிடோல், பொலித்தியோன், லெபேசிட், மெற்ற சிஸ்டொக்ஸ், மட்டாசில், டிப்ரறெக்ஸ், அன்றக்ஞோல், குப்ருவிற், செரசான், லொனகோல், ஹெடோனல், சேர்கோப்பூர், றய்பூட்டோன், பேகோன், பெயறெக்ஸ், றகுமின் ஆகிய ரசாயனங்கள் மேற்கு ஜேர்மனியில் அண்கவர் உறைகளுடன் தயாரிக்கப்பட்டு எங்களால் மட்டுமே விநியோகிக்கப்பட்டு இத்தீவு அடங்கலிலும் எங்களால் நியமிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள் மூலமாகவே விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்பதை அறிவித்துக் கொள்கிறோம். இவர்களைத் தவிர எங்களின் ரசாயனப் பொருட்களை விற்பனை செய்ய அல்லது ஓடர்கள் சேகரிக்க எவ்வித தனிப்பட்ட நபர்களையும் எங்கள் விற்பனை பிரதிநிதிகளாக நியமிக்கவில்லை. இப்பேர்பட்ட போலி நபர்கள் வலையில் சிக்கி போலி ரசாயனங்களைப் பெற்று ஏமாந்து போகவேண்டாமென பொது ஜனங்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

ஹேலீஸ் லிமிட்டட்,
தபால் பெட்டி 70,
400, டீன்ஸ் ரோட்,
கொழும்பு-10
தொலைபேசி: 9206

BAYER

## விளம்பரம்

### தேவை

வடபகுதி விவசாய
உற்பத்தியாளர்
கூட்டுறவுச் சமாசம்,
111, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்துக்கு 75000 "சி" தர சாக்குகள் தேவை. 12-10-67 பகல் 12 மணிக்கு முன்னர் விண்ணப்பபத்திரங்களை நிபந்தனைகளுடன் பெற்றுக் கொள்ளவும்.

காரியதரிசி.

280

### விளையாட்டுப்பயிற்சி

குரும்பசிட்டி, திங்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் விளையாட்டு வீரர்களுக்கு உதைபந்தாட்டம். கிரிக்கெட் கைப்பந்தாட்டம், உடற்பயிற்சி போன்ற துறைகளில் திரு. போல் யேசுதாசன் தலைமையிலான தேசிய விளையாட்டுத்துறை அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளினால் போதனா பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சிகளுக்கு பாடசாலை மாணவர்களும் காரியாதிகாரி பிரிவில் அமைந்துள்ள விளையாட்டுக் கழக வீரர்களும் அழைக்கப்படுகின்றனர். 16-ம்திகதி முதல் 19-ம் திகதிவரை சங்கானை யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, வவனியா போன்ற இடங்களில் திரு. அல்பேர்ட் பெர்னாந்துவால் உதைபந்தாட்டப்பயிற்சி அளிக்கப்படும்.

உடற்பயிற்சி போதனா வகுப்பு மூன்று தினங்களுக்கு பி. ஆர். மேதாவினால் யாழ். அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் நடாத்தப்படும். யாழ். மத்திய கல்லூரியில் கைப்பந்தாட்ட பயிற்சி முகாம் திரு. சி. அழகேந்திராவினால் 10, 11-ம் திகதிகளில் நடாத்தப்படும் கிரிக்கெட் பயிற்சி வகுப்பு திரு. ஸ்ரான்லி குறுப்பு தலைமையில் வை. எம். சி ஏ. மண்டபத்தில் 11-ம்திகதி நடத்தப்படும்.

யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டம்:

# மத்திய கல்லூரி இந்துவை தோற்கடித்தது

யாழ்ப்பாணம், செவ்

யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற ஒரு பெரும் உதைபந்தாட்டப் பலப்பரீட்சையில் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் பலமாக மோதிய மத்திய கல்லூரி வீரர்கள் யாழ். இந்து வீரர்களை 2-0 கோல்களால் தோற்கடித்தனர்.

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாம் பிரிவில் 'ஏ' டிவிஷனைச் சேர்ந்த இக் கோஷ்டிகளின் மோதல் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரையும் விறுவிறுப்பாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்பட்டதால் ரசிகர்கள் மத்தியில் பலத்த ஆரவாரம் ஏற்பட்டது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் மத்திய கல்லூரியின் முன்னணி வீரர் கே. பரமேஸ்வரன் முதலாவது கோலை வெற்றிகரமாக விளாசினார். இடைவேளைக்குப் பின்னரும் இக்கோஷ்டியைச் சேர்ந்த கிருஷ்ணலிங்கம் ஒரு கோலை அற்புதமாக அடித்தார். யாழ். இந்துக் கோஷ்டியினரின் சில கோலடிக்கும் முயற்சிகள் ரசிக்கக்கூடியதாக விருந்தது. மத்திய கல்லூரிக் கோஷ்டியினரின் 'பாசிங்' ஆட்டம் அருமையாகவிருந்தது.

இப்போட்டிக்கு திரு. ஆர். சண்முகரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். [வி. நி.]

சுழிபுரம், திங்கள்

'கிராமத்தின் முன்னேற்றத் திட்டங்களில் கிராம முன்னேற்றச் சங்கங்களும் கிராமங்களின் கலை கலாச்சாரங்களை வளர்ப்பதில் சன சமூக நிலையங்களும் இருபிரிவுகளாககிராமத்துக்கு அரும் பெரும் பணிகளை ஆற்றிவந்துள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சன சமூக நிலையங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வந்துள்ளன என்பதை மேலதிகாரிகள் முதல் மந்திரிகள்வரை புகழ்ந்துள்ளனர். இந்தவகையில் இரண்டையும் ஒன்றாக இணைக்காது தனித்தனி இயங்கச் செய்வதே மிக்க நன்மைபயப்பதாகும்' என சன சமூக சமாஜ விழாவிற்குத்தலைமைவகித்துப் பேசிய சமூக ஜோதி சி. தியாகராசா குறிப்பிட்டார்.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
சிவாஜி - கே ஆர். விஜயா
நடித்த
**தங்கை**

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
நடித்த
**தாயின் மடியில்**

**MANOHARA**
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
**EUROPE BY NIGHT**
(Adults Only)

**REGAL** JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45 p. m.
Anthony Quinn-Alan Bates
in
**ZORBA THE GREEK**
(Adults)


## வரி விளம்பரம்

### தேவை

வான் சேல்ஸ்மன்

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் விற்பனை செய்வதற்கு நன்கு அனுபவமுள்ள வான் சேல்ஸ்மன் தேவை. விவசாய இரசாயனப் பொருட்களைப் பற்றி விபரந்தெரிந்தவராயிருத்தல் விரும்பத்தக்கது. பிணைப்பணம் ரூ. 2000/-. மாதாந்த வேதனமும் கமிஷனும் வழங்கப்படும். ஒட்டோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 2234

காஷியர்

கொழும்பு, 4, காலி வீதியில் அமைந்துள்ள பிரபலமான சைவ ஹோட்டல்ஒன்றுக்கு ரொக்கமாக பிணைப்பணம் செலுத்தக் கூடிய காஷியர் தேவை. தங்கும் இடவசதி உண்டு. விவாகம் ஆகாதவர் விரும்பத்தக்கவர். விளம்பர இல. 2227, ஈழநாடு மே/பா. த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 2227

### விற்பனைக்கு

வளவு

அராலி மேற்கு கொட்டைக்காட்டில் அந்திரான் பனை, தென்னையும், மற்றும் பிரயோசனங்களுடன் 15 பரப்பு வளவு விற்பனைக்குண்டு. நேரில் வரவும். ச. இளையதம்பி. வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. 2217

எலக்ரிக் வெல்டிங் பிளாண்ட்:

27 குதிரைப்பவர் உள்ள டீசல் எஞ்சினில் இயங்கும் மிக உறுதியான பிளாண்டு. "400" ஆம்ஸ் கொண்டது. ஒரே வேளையில் இரண்டு லாம்புகளில் வேலை செய்யக் கூடியது. ஆயிரத்துக்கும் அதிகமான பல்ப்ஸ்கள் எரிய வைக்கக்கூடியது. எங்கும் நகர்த்திச் செல்லக்கூடிய வாகனத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. விபரங்கட்கு:- ஸ்ரார் எலக்றிக் வெல்டேஸ், ஸ்ரான்லி வீதி, [வெலிங்டன் சந்தி], யாழ்ப்பாணம். 2240

### விற்பனைக்கு

காணி:

ஆனையிறவுக்கு அண்மையிலுள்ள இயக்கச்சியில் 80 ஏக்கர்களைக் கொண்ட தென்னை, கஜு, நெல்காணி பகுதியாகவோ அல்லது ஒருமித்தோ விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ரி. வடிவுநாதன், பிரதிநிதி ஹவுஸ் அன் புறப்பட்டி டிரேட்ஸ் லிமிட்டெட் பூகன்ஸ், 71, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 2239

காணி

திருநெல்வேலி சந்தியில் இருந்து கொக்குவில் ஸ்ரேசனுக்கு போகும் வீதியில் வயிரவர் கோவிலுக்கு பக்கத்தில் குடியிருக்க வசதியான கிணற்றுடன் உள்ள 4 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும். கை. மங்களேஸ்வரன், கனகராயன்குளம், மாங்குளம். 2237

உழவு யந்திரம்

தற்பொழுது பாவனையிலுள்ள ஒரு பேர்குசன் லாம் பெண்ணெய் உழவு யந்திரமும் ஒரு அல்கன் நீர் இறை யந்திரமும் விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் கடிதத் தொடர்பு கொள்க. A. G. இராசசூரியர், கடற்கரை வீதி. யாழ்ப்பாணம். 2236

### கல்வி

வகுப்புகள்:

பிரவேச, பால, பண்டித வகுப்புகள் 12-10-67 முதல் ஆரம்பம். சேரவிரும்புவோர் உடன் மனுச்செய்க. இங்ஙனம், பதிவாளர், உயர் கலைக் கல்லூரி, யாழ்ப்பாணம். 2214

### Education

Automobile Engineering Courses (both Theory & Practicals) will be conducted from 3-11-67. For further particulars Apply The Registrar, College of Higher Studies. Jaffna. 2215


**3-வது குதூகல வாரம்!**

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **பிளாஸா** [வெள்ளவத்தை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிஷ்ணா** [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

**ராஜ்** [நீர்கொழும்பு]

**மற்றும் 4 திரைகளில்!**

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி
ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும்
பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

# குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிஷ்ருண பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்



# உங்கள் வரவேற்பு அறையில் அழகு



காட்சிக்குவைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தனித்த கூட்டான தளபாட வகையறுக்களில் இந்த செற் ஒன்றாகும். றெக்ஸீன் மெத்தை தைக்கப் பெற்ற இந்த வரவேற்பறைத் தளபாட செற் எந்த வீட்டுக்கும் சோபையளிக்கும். 6 தளபாடங்களுமாக **ரூ. 275/-**

**எமதுமற்றொரு சிறப்புப் பொருள்!**
கண்ணறை ரப்பர்மெத்தைபொருத்திய தளபாடம் தரச்சிறப்புவாய்ந்த வெட்டு மரத்தால் உருவாக்கப்பட்டவை. வழமைவிலையின் பாதிவிலைக்கு கொடுக்கப்படுகின்றன.

இன்றே வருக.

இவ்வித சகாய விலையில் சில குறிப்பிட்ட தளபாடங்களே உள.

**எம். எஸ். பர்னாந்து அன்ட் கம்பனி**

110, மெயின் வீதி மொறட்டுவை.

கிளைகள்: இல. 1, 317, பெரியமுல்லை, நீர்கொழும்பு. இல. 32 கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏஸியனில்' இலங்கை சேராது

## நன்மை இருந்தாலும் இப்போது அவசரமில்லை என டட்லி கருத்து

### மலேஷிய—இலங்கைப் பிரதமர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கை

கோலாலம்பூர், ஒக். 9

**மலேஷியா, இந்தோனேஷியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் இணைந்துள்ள 'ஏஸியனி'ல் இலங்கை இப்போதைக்குச் சேராது என இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கோலாலம்பூரில் அறிவித்துள்ளார்.**

வியட்னும் போருக்குத் தீர்வு காண்பதில் சம்பந்தப்பட்ட கட்சிகள், அதிக பங்கினை ஆற்ற முன்வரவேண்டுமென இங்கு வெளியிடப்பட்டுள்ள இலங்கை - மலேஷியப் பிரதமர்களின் இணைப்பறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் 5 நாள் மலேஷிய விஜயத்தின் முடிவிலேயே, இந்த இணைப்பறிக்கை வெளியிடப்பட்டது.

**ரப்பர், தேயிலை ஒத்துழைப்பு**

பின்னர், பத்திரிகையாளரிடம் இலங்கைப் பிரதமர் பேசுகையில், சர்வதேச நிலைகள் யாவற்றிலும், ரப்பர் விலைகளை உறுதிப்படுத்துவதற்கு இலங்கையும், மலேஷியாவும் ஒத்துழைக்கும் எனக் குறிப்பிட்டார்.

ரப்பர் உற்பத்தி, விலைகள். சந்தை இவை பற்றி மலேஷியாவுடன் இலங்கை அதிக ஒத்துழைப்பை மேற்கொள்ளுமெனவும் அவர் தெரிவித்தார்.

தேயிலை உற்பத்தி விலை, சந்தை சம்பந்தமாக இலங்கை, இந்தியாவுடனும் இவ்வித ஒத்துழைப்பில் ஈடுபட்டுள்ளதாக திரு. டட்லி சேனநாயக்கா மேலும் குறிப்பிட்டார்.

உலகத் தேயிலை உற்பத்தியில், 85 சத வீதம், இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளினால் மட்டுமே உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

**'ஏஸியன்'**

புதிய ஆசிய நாடுகள் கூட்டணியான 'ஏஸியனி'ல் இலங்கை சேருமா என இலங்கைப் பிரதமரிடம் கேட்கப்பட்டபோது, அதில் சேர்வதால் இலங்கைக்கு நன்மை உண்டாகும் என்றாலும், சேருவதற்கான அவசரத்துக்கு அவசியம் எதுவும் இருப்பதாக இப்போது தமக்குத் தோன்றவில்லை என்று திரு. டட்லி சேனநாயக்கா கூறினார்.

இலங்கை, சர்வதேசப் பிரச்னைகளில், தொடர்ந்து தனது கூட்டுச்சேராக் கொள்கையைப் பின்பற்றும் என இலங்கைப்பிரதமர் உறுதியளித்தார்.

---

## கொழும்பில் சரஸ்வதிவிழா

கொழும்பு, திங்கள்

துறைமுக (சரக்குக்) கூட்டுத்தாபன இந்துசங்கம் கலைமகள் விழாவினை இன்று மாலை பக்டாட் பகுதியிலுள்ள துறைமுக அதிகார சபையின் மின்சார உப நிலைய மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறது. இங்கு இவ்விழாவினை பல சமயத்தவர்களும் சேர்ந்து கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. போஷகர் ஏ. டபிள்யு. ஏ. அபயகுணசேகராவின் வரவேற்புரையை அடுத்து திரு. வி, எவ். குணரத்தின 'வணக்கநெறி' என்னும் பொருள் பற்றியும், திரு. இ. ஈழவேந்தன் 'சரஸ்வதி பூசை மகிமை' பற்றியும் உரையாற்றுவர். இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

---

## இன்று

நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசஇராசேசுவரியம்மன் ஆலயத்தில் இன்று மாலை நல்லை திருஞான சம்பந்தராதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் பிரசங்கம் நிகழ்த்துவார்கள்.

---

## இ. போ. ச. பஸ் பொலிஸ்ஜீப் மோதல்

வல்வெட்டித்துறை, திங்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்துகொட்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்றும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 'ஜீப்' வண்டி ஒன்றும் இன்று மாலை மோதிக்கொண்டன. பஸ்ஸும் ஜீப் வண்டியும் சேதத்துக்குள்ளானது. வல்வை பொலிஸ் நிலையத்துக்குப் புதிதாகச் சமீபத்தில் இந்த ஜீப் அனுப்பப்பட்டிருந்தது.

---

## சிறகுவலைத் திருட்டை ஒழிக்க தொண்டர்படை

### கடற்றொழிலாளர் கூட்டத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

''சிறகுவலைத் திருட்டைத் துரிதமாக இல்லாது செய்வதற்குப் பொலிசாருடன் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் வேண்டும், திருடர்களைக் கண்டுபிடிப்பதற்கு பொதுமக்களிடையே தெரிவு செய்யப்படும் தொண்டர் படையினரை நியமிக்க வேண்டும். இதனால் இருபகுதியினரது கண்காணிப்பினாலும் திருட்டை நிறுத்தலாம்.''

இவ்வாறு சென்ற ஞாயிறு மாலை நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூகநிலையத்தில் சிறகுவலைக் கடற்றொழிலாளர் சங்கக் கூட்டத்தில் பேசிய பொலிஸ் அதிகாரி திரு. இராசையா தெரிவித்தார்.

சமீபகாலமாக அடிக்கடி சிறகுவலைகள் திருட்டுப் போவதையடுத்து உருவாக்கப்பட்ட இச்சங்கத்தில் மேற்படி வட்டார கிராமசேவகர் பேசும்போது இத்தகைய திருட்டு நீண்ட காலமாக நடைபெறுவது வழக்கமாகிவிட்டதென்றும் பொதுமக்களின் அக்கறையீனமே இதற்குக்காரணமென்றும் குறிப்பிட்டதோடு எதிர்காலத்தில் இத்தகைய நடவடிக்கைகளை பலரது ஒற்றுமையின் காரணமாக நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இரவுகாலங்களில் பண்ணை வீதி, காக்கைதிவு, குருசடித்தீவு ஆகிய இடங்களில் தொண்டர் படையினர் ரோந்து சுற்றவேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பூர்வாங்கநடவடிக்கையாக பத்துபேர் கொண்ட கோஷ்டி ஒன்று சுற்ற ஆரம்பித்தது.

சிறகுவலைச் சங்கச் செயலாளர் ம. அருமைத்துரை பேசுகையில் கூறியதாவது: ''நமது சங்கத்தைப் பலப்படுத்தி எதிர்காலத்தில் ஆக்கபூர்வமானகாரியங்களை நாம் சாதிக்கவேண்டுமானால் தேதிய தொழிலாளர் சம்மேளனத்துடன் சங்கத்தை இணைக்கவேண்டும் என்றார்.

நடப்பு வருடத்துக்குரிய புதிய தலைவராக திரு. சூ. அந்தோனிப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார். (நி)

---

## தீ மூட்டி பெண் தற்கொலை

புலோலி, திங்கள்

பெண்ணொருவர் தனது உடலில் மண்ணெண்ணை ஊற்றி தீ மூட்டித் தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் புலோலி மேற்கு வியாபாரிமூலையில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். ராமநாதன் மரணவிசாரணை நடத்தினார்.

அம்பலவாணர் மனைவி சிவகாபிள்ளை [40 வயது] உடம்பெல்லாம் தீப்பிடித்து அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்ததாகவும். புலோலி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் அங்கு அவர் மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

'உலகத்தில் நிம்மதியாக வாழ முடியாதிருப்பதால் என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்' என்று காலமானவர் இறப்பதற்கு முன் தெரிவித்ததாக சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## இன்றையமோதல்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான 1-ம்பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 3-15 மணியளவில் 'பி' டிவிசனில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி போட்டியிடவிருக்கின்றது.

இப்போட்டியை அடுத்து 'ஏ' டிவிசனில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் இடையே மோதல் நடக்கும். [வி. நி.]

---

கிளிநொச்சி

## சிசுக் கொலை வழக்கில் இளம் பெண் விடுதலை

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சி சிசுக்கொலை வழக்கில் எதிரியான இளம் பெண் இராசம்மா விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கு வட பகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நேற்றுக்காலை மூன்றுவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

நீதியரசர் உரைநிகழ்த்திய பின், ஜூரிசபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்தபின் எதிரி குற்றவாளியல்லவென ஏகமனதாக தீர்ப்பளித்தனர்.

இவ்வழக்கில் கிளிநொச்சியைச் சேர்ந்த 9 மாதக் குழந்தையான இராசு விக்னேஸ்வரனை 65-ம் ஆண்டு ஆகஸ்ட் 25-ம் திகதி கொலை செய்ததாக துரைசாமி இராசம்மா என்ற இளம் பெண் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் எஸ். தம்பித்துரை, அட்வகேட் வி. என். நவரத்தினத்தின் உதவியுடனும், புறக்டர் எஸ். அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஏ. சிவானந்தனும், முடிக்குரிய அட்வகேட் கே. இரத்னேசரும் ஆஜரானார்கள்.

அசைஸ் விசாரணை மீண்டும் 12-ம் தேதி நடைபெறும்.

---

## 'சிறந்த பிரஜைகளை கல்வி உருவாக்க வேண்டும்'

### ஆசிரியபயிற்சி கல்லூரி அதிபர்

புன்னாலைக்கட்டுவன், திங்.

''எமது கல்விமுறை வெறும் உத்தியோகத்தரை உருவாக்கும் நோக்கத்துடனன்றி நாட்டின் அபிவிருத்திக்கான சிறந்த பிரஜைகளை உருவாக்கும் நோக்கத்துடன் அமையவேண்டும். சாதி, சமய, இன அடிப்படையில் தொடர்ந்து சிந்திக்கவைக்கும் கல்வி முறை தேசிய ஒற்றுமைக்கு வழி வகுக்க முடியாது.''

இவ்வாறு பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் திரு. சி. கந்தசாமி வதிரி தெற்கு ரோமன் கத்தோலிக்க பாடசாலைப் பெற்றார் தின விழாவிற் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றினார்.

தொடர்ந்து பேசிய திரு. கந்தசாமி, பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆரம்பவகுப்புகளில் கடமையாற்றவேண்டிய அவசியத்தையும், ஒழுக்கக் கல்வி, சமயக்கல்வி என்பவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். தலைமையாசிரியை வண. சிஸ். எம். சபீனா நன்றி கூறினார்.

---

## இன வேற்றுமை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டன் தாம் ஆலோசனைகள் நடத்துவதாகவும் பிரதமர் கூறினார்.

தமது மலேசிய பிரயாணம் பலவகையிலும் பயனுள்ளதாகவிருந்ததென்றும், அங்கு ஏற்பட்டுள்ள துரித முன்னேற்றங்களையும் தம்மால் தெரிந்துகொள்ள முடிந்ததென்றும் அவர் கூறினார். மலேசியாவிலுள்ள எண்ணெய் வளத்திட்டங்களைப் பார்வையிட்டதாகம் அதுபோல் இலங்கையிலும் ஆரம்பிப்பது பற்றி ஆலோசிப்பதாக நம் பிரதமர் சொன்னார்.

'ஏஸியனில் சேர்வதற்கு இரண்டு அம்சங்களை ஆலோசிக்கவேண்டியிருக்கின்றது. ஏஸியனுக்கும் நமது நாட்டின் பூகோளஅமைம்புக்கும் உள்ள தொடர்புகள் ஒரு அம்சம்; இரண்டாவது அம்சம் நமக்கும் நமது அண்டை நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் பர்மா போன்ற நாடுகளுக்குள்ள உறவுபற்றியதாகும் என்றார் பிரதமர்.

மலேசியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ரப்பர் போன்ற விற்பனை பொருட்கள் சம்பந்தமாக பொருளாதார ஒப்பந்தம் ஒன்று ஏற்படுவதை துங்கு அப்துல் ரகுமான் விரும்புகிறார். பிராந்திய ஒப்பந்தங்களைவிட இரு நாடுகளுக்கிடையில் ஏற்படும் தொடர்புகள் சிறந்தது என்று இருவரும் ஒப்புக்கொண்டோம், ஏஸியனில் சேர்வதுபற்றி அவசரம் எதுவுமில்லை. அப்படி சேருவதானால் மலேசியா நமக்கு ஆதரவு தரும் என்று அவரேயும் விளக்கினார்.

ஏஸியனில் இலங்கை சேரக்கூடாது என்று சீனா வற்புறுத்தும் என்று கூறப்படுவது பற்றி பிரதமர் கருத்து வெளியிடுகையில், இலங்கை சுதந்திரநாடு, சேருவதும் சேராததும் எமது விருப்பம் என்றார்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org